பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இப்புத்தகத்தில்.

# சலவாத்துப்பாட்டு.

கப்பற்பாட்டு. ஊஞ்சற்பாட்டு.

கும்மிப்பாட்டு. தாலாட்டு.

தோழிப்பெண்பாட்டு.

இவைகள் அடங்கியிருக்கின்றன

84
3-75

இதனை-இராமநாதபுரம்

இரவுண்ஷாப்புக்கடை ப-வெ

**முகம்மது இபுறாகீம்சாகிபு**

அவர்கள் முயற்சியால்

குலசேகரம்பட்டணம்

சர்க்கரைசாகிபுத்தம்பி யவர்கள்குமாரர்

**அல்லாபிச்சைப்புலவர்**

அவர்களால்

இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தி

கொன்னூர்

**மாணிக்கமுதலியார்**

கம்பேனியாரவர்களது

மனோன்மணிவிலாசவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து-௲௨௱௯௰௨ (ஹி)-றபீயுல்ஆகிறுபீ.

222303

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது—காயற்பட்டணம்.

உ. நுமானயினூர்லப்பைப்புலவரவர்கள்பாடிய

# சலவாத்துப்பாட்டு

## கொச்சகக்கலிப்பா.

இன்னல்லாகவென்றேகுறுஆனிலே யகனுயர்த்திறக்கியநன்ப
யன், சொன்னன்பானுமலக்குகளியாருமென் றாதர்மீதிற்சொலு
ஞ்சலவாத்தையே, பன்னியாரு மியப்புக்களொன்றிற்குப் பத்து
யானுரைப்பேனென்றதாலது, தன்னையோதினரூரு முகம்மது
சல்லல்லாகுஅலைகிவசல்லமே. (க)

மன்னர்மூசாநபிக்கொருமானிடன் மாறுசெய்தவன் மாண்
டடக்காதிருந், தென்னவேயிறை யென்னடியானிடத் தேகிநீர்சப
னிட்டடக்கும்மவ, னுன்னியேநபிபேர்தவுறுத்திற்கண் டோதினுன்
சலவாத்தொன்றதாலது, தன்னையோதினரூருமுகம்மது சல்லல்
லாகு அலைகிவசல்லமே. (உ)

நாதர்மூசாநபிதான்கியாமத்துநாளில்நாவினிற்றுகம்வாரசம
லே, யோதவேயிறையேவலியேனங்ங ஞேதயாறப்புஞன்றுனாயா
யெனத், தூதராமிறசூல்சலவாத்தைநீர்சொல்லும் தாகமுறுதென
ச்சொன்னதாற், றுதன்னையுநீராரூமுகம்மது சல்லல்லாகு அலைகி
வசல்லமே. (ந)

உங்கள்தீன்வழியாயிருந்துங்கள்பே ரோதக்கேட்டடனேசல
வாத்தவன், புங்கமாயுரையாதபகிலனைப்போல் பகிலனில்லையெனத்
தேவரீர், சங்கைநாவுகொண்டோதினதாலது தன்னையோதவுந்தந்
துங்கபுரினிற், றங்குநாளென்னை யாரூருமுகம்மது சல்லல்லாகு
அலைகிவசல்லமே. (ச)

காட்டுமானபி யேயுமைத்தாள்பின்னை காலைத்திலில் லைத்தி
னியால்வர, மாட்டேனுகிலுமதும்மத்தானவர் வள்ளலேயுங்கள்
பேரவர்காதினிற், கேட்டுமேசலவாத்துலாயார்வழி கேட்டிலாவ
னென்றோதினதாலும்மைச், சாட்டினேனென்னையாரூ முகம்மது
சல்லல்லாகு அலைகிவசல்லமே. (ரு)

மெய்க்குருவைவிரித்திறையேவினவேதவாய்மைவிலக்குகள்
ளுகை, சிக்கிரப்பலாப்பெரும்பாவமே செய்தனியானடியே
னென்னசெய்குவேன், மக்கராஜமுகம்மதேநும் சலவாத்தையோ
தும்வரிசையினுலென்றன், சக்கறுத்திலிலாரூ முகம்மது சல்லல்
லாகு அலைகிவசல்லமே. (சா)

துஞ்சுநாளுங்கபுறிலடக்கியே சோருநாளுங்கியாமத்தமளி யா, லஞ்சுநாளுமஞ்சறிலே அதாபனநாளுமடியாரனைவருந், கெஞ்சுநாளுமிறைவனைகாமொன்றுகேட்குநாள்முஸ்தக்கீமெனும் பாலத்திற், றஞ்சநீயென்னையாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே. (எ)

தம்பிரான்சதுவானத்துச்சூரியன்றன்னையே சவளத்துயர்வாகவே, முன்புகாட்டிநிறுத்துமப்போதலை யூழேவெந்துமுயங்கிஅந்தோவென, வெம்பியேஅழுநாளைமகுறு வேலையாள்பயர் நீரன்றிவேறிலைத், தம்பமாகவந்தாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே. (அ)

வருலாவுமடமயிலாசியா மங்கைமாது மறிபமுமேமணவ், கோருமாதி யுமக்கருள்செய்மணக் கோலமாமகு மூதினிமேலறிப்பொன், ஹுருலாவிவருந்திருக்காட்சியு முண்மையாதிதிதாலறையுங் காணவே, தாருநீயென்னையாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே. (கூ)

அல்லெல்லாநடந் தேகடந்தேழுவானம்பாத்துயர்வாகியப் பால்அறு, சில்லல்லாமுனமத்தகிய்யாத்லைதயே யியம்பவாதிதிருவுளமானதாற், சொல்லெலாஞ்சலவாத்துஞ்சலாமுமே சொன்னதாலதையாளுமியம்பினேன், சல்லல்லாகுஅலாமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமே. (௰)

சலவாத்துப்பாட்டு முற்றிற்று

முன்னோர்கள்பாடிய

## கப்பற்பாட்டு

லாயிலாக இல்லல்லாகு - இல்லல்லா
முகம்மதுற்றசூலுல்லாகி சூலுல்லா

(க) முத்தமிழு லுதித்துவந்தோர் இல்லல்லா
மொழியகதாய்ப் படைக்கவந்தோர்- இல்லல்லா
சத்தனருள்சிறக்கவந்தோர் இல்லல்லா
சனகவிளக் காகிவந்தோர் இல்லல்லா

புத்திமதிஹுக்கனருளுட்பிரிவதாகிப், பொற்பதிகனத்தறுசு நற்புவியும்வாழ்க, எத்திலசையுமெய்க்கவொருபொற்பிரபையாகி, ஏகாந்தமானதவ ரத்நமயிலாகிச், சுத்தமுடன்நான்குமூலைக்கிணறுமாகித், துய்யகலிமாவதனிலுட்பொருளுமாகிக், குற்றமணுகாதநபி கப்பல்சவிபாடக், கோமானேயெங்குறிறைசிமாணிகாப்பு,(லாயி)

(உ) அலிபுமரமேறுவாய் இல்லல்லா
அடுத்திடுதோல் வங்கதுவாயு இல்லல்லா
மெலிவில்லாஹேப் தலைமரமாய் இல்லல்லா
பிருத்திமேய் செங்கதுவாய் இல்லல்லா

மலிவானதாலினுற் சாம்பரூலைவத்து, வளர்கின்றலாமதாற்க மர்யந்துகட்டிக், குலவுநலமீமினுற் கபாலங்களிட்டுக், கோமான் றன்கேயினுற்சிங்கஞ்சலைமத்து, வலியாதகாபென்ற அணியம்ப ரப்பி, வல்லவன்ஹாலென்ற சுக்கானையேற்றிப், பெலமாகஇவ்வெ ழுத் தால்வங்கம்லைவத்தார், பேசுங்கன்ஹூன்றதா லெவருமே. காணே. (லாயிலாக)

(௩) நால்சிபத்துத்தாவாமணி இல்லல்லா
நல்லபச்சை மலக்கூத்து இல்லல்லா
வாசஜய றாத்துதன்னில் இல்லல்லா
வருஞ்சிவப்புப் பவளமது இல்லல்லா

ஆசைபொருமலக் கூத்துநற்சறப்பதாகி, அழகானலாகூத்து த் தங்கமுடன்நல்ல, ஓசையுட்டாமரைப் பூப்பலதுந்தூக்கி, உண் மையெனுஞானகலை மேற்கட்டிகட்டிப், பேசுமொருஅவ்வலெ னு நற்கொடியுமேற்றிப், பிசகாயல்ஜல்ஜலெனு மேளந்தொனிக் கத், காசகலநால்பேர்கள் யாத்திகாலோதிக்,கடல்மீநிற்கப்பலெயி றக்கினுரையா. (லாயிலாக)

(௪) பாய்மாந்தான் பேயதனுல் இல்லல்லா
பகரும்தேய்தான் கிபுலாவாய் இல்லல்லா
ஆயுங்கவி யால்மார்தான் இல்லல்லா
அடுத்ததொரு தாலதனுல் இல்லல்லா

தோயாமலிதுகள் நன்றாகவேகட்டித், துப்யலாம்சன்னமின்ன லாலாத்துமாக, நேயமுடன்காம்பரூ நாலெழுத்தைதனுமாக, நிக ரரியசவுந்திரப் பாய்மாத்தேயுடன், ஒயாததுண்டா விளக்கெழு த்தைதனுமாய், உண்மைசேர்வெற்றியா யொக்கத்துலங்க, நாயன ருளீராரூ மிரங்கிதிர்ந்து, நலமாகநற்சாக் கேற்றினுனாயா.(லாயி)

(௫) ஆனைலிமாவேற்றி இல்லல்லா
அவவுடன்சுமானேற்றி இல்லல்லா
இனத்துள்ள கப்பலிலே இல்லல்லா
சிறந்தமகு பூபெற்றி இல்லல்லா

தானமுடன்கிலாசுகள் தொங்ஹூற்றியாறம், தகுமாங்கணக்க ர்தாமிருபேருமாக, ஈனமில்லாச்சிறுங்கிருபேருமாக,இயல்பான கப்பல்நகு தாநோக்கினேடும், மானமுடனம்மாலி னெருபேரி னேடுப், வளமானவங்கமதி லேறியேநின்ற ஆனதொரு ஆ கூ. ஓ யென்னும், அழகானமத்திரப் பாய்விரித்தோடினுர். (லாயிலாக)

(௬) காயல்நகர்க் கடல்கடந்து இல்லல்லா
கன்யகுமரினிலதிற்போய் இல்லல்லா

ஆயுமலை மாளுஞ்சென்று இல்லல்லா
அடுத்தபொன்றூக் கலையைக்கடந்து- இல்லல்லா

மாயாதகண்ணூர் தலைச்சேரிகண்டு, வங்காரமானஜன் கண்ணூடிவைத்து ஓயாதஅட்சரக் கயிறுபாயேற்றி, ஓங்காரமானபகர் தன்னிலேயேறிச், சாயாதவண்ணமா யோடுமெப்போது, சத்துருக் கள்ளனா யங்குளவர்கண்டு, நீயாருசொல்லென காகிகூ வென நேசமொழிகேட்டங்ங ளோடினையா (லாயிலாக)

(எ) கள்ளக்கப்பல் தன்னைவென்று இல்லல்லா
கனத்தபகர் தனைக்கடந்து இல்லல்லா
தெள்ளியஜித் தாவிற்சென்று இல்லல்லா
சிறந்தலங்கர் விட்டிறங்கி இல்லல்லா

வள்ளல்மகுழுதுநபி மக்காவிற்சென்று. வண்மையுடனேகரு பாவைவலம்வந்து, வின்னுமுறைஆதநபி பாதக்கடந்து, மேவு மதினாநகர மெய்ப்போடுசென்று, உள்ளகுமதாம்வெளியில் வாய் பொற்றிநின்று, ஒப்பானகாபகபு சைனியிற்சென்று, மெள்ளவரு பன்னிமகு ழுதைக்கடந்து,மேலவன்கலறத்தி லானூர்களையா (லா)

(அ) ஆனபெருகேகனவன் இல்லல்லா
அரியசெய்கை தனைப்புகழ்ந்து இல்லல்லா
தீன்புகழும் நபியிறசூல் இல்லல்லா
செங்கமலப் பதம்புகழ்ந்து இல்லல்லா

தானுனஎசனை முகியித்தீன்பாதர், தப்பாமலெப்போதும் நட்பாய்ப்புகழ்ந்து, சோனுனஆதிகுதநத்லைத்தெரிந்து, குத்து சுறாகுநபி யானூர்கள்நல்ல, தீனுனம்பர்களிதை நன்றாய்த்தெளிந்து, ஜெயமுள்ளவோர்பொருளே யென்றென்றுநாடி, மானமொடுமுற்றிடிற் பேறதிசமுண்டாய், வல்லவன்கிருபையமிக வளரு மேஜயா- (லாயிலாக)

கப்பற்பாட்டு —முற்றுப்பெற்றது,

நாகூர் — முகம்மதுப்புலவர்பாடிய

## ஊஞ்சற்பாட்டு

தரு-இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடவாங்கள் ஊஞ்சல் ஆடவாங்கள்
அன்னமே பொன்னூஞ்சல்-ஆடவாங்கள்

அநுபல்லவி

ஆடவாங்கள் கூறல்கிஞ்க ளோடிவாங்கள்
ஆலநபியுல்லாமேத் பாடவாங்கள்... ... ...(ஆட)

சரணங்கள்,

க. ஆதிபெரியோனருளாற் கால்களூட்டி
யவனருசொளிவாலே விட்டம்போட்டு
சீதமார்குருசொலிவால் வடங்கள்பூட்டி
ஜென்னத்தினொளிவாலே பலகைபாவித்
தேருடன்கூறல்கேன்கள் கவரிவீசக்
கிருபையுடன்வானவரா லாத்தியேந்த
ஆதமுதல்நபிமார்கள் வடந்தொட்டாட்ட
ஆலநபிமகுமூத ராடுமூஞ்சல்...... ... ... ...(ஆட)

உ. பச்சைமரகதந்தன்னாற் கால்களூட்டிப்
பவளவயிடூரியத்தால் விட்டம்போட்டு
நட்சத்திரங்கள்போலே வடங்கள்பூட்டி
நல்மணிமுத்தினாற் பலகைபாவிக்
கச்சணிந்தகூறல்கேன்கள் கவரிவீசக்
கனவர்கஸ்தூரியா லாத்தியேந்த
முச்சகம்புகழ்நபிமார் வடந்தொட்டாட்ட
முகம்மதுற்றசூல்நயினா ராடுமூஞ்சல்...... ...(ஆட)

௩. அதிகவொளிச்சூரியனாற் கால்களூட்டி
யழகுநட்சத்திரத்தால் விட்டம்போட்டு
மதியொளிவுசந்திரனால் வடங்கள்பூட்டி
மறையாதமின்னொளிவாற் பலகைபாவிப்
பதியொளிவுகூறல்கேன்கள் கவரிவீசப்
பச்சைக்கற்பூர ஆலாத்தியேந்த
கதிஜா ஆயிசா இருவர் வடந்தொட்டாட்ட
காத்திமுல்நபியிருந் தாடுமூஞ்சல்...... ... ...(ஆட)

ச. வயிரம்வயிடூரியத்தாற் கால்களூட்டி
மாணிக்கத்தாலதின்மேல் விட்டம்போட்டே
உயரொளிவுநீலமணி வடங்கள்பூட்டி
யோசைபெறுஞ்சவனமணிப் பலகைபாவி
நயமுடையகூறல்கேன்கள் கவரிவீச
நறைகமழுங்குங்குமத்தா லாலாத்தியேந்த
மைமூனுமாரியத்தும் வடந்தொட்டாட்ட
முகம்மதுற்றசூல்நயினா ராடுமூஞ்சல்...... ...(ஆட)

ரு. சிறந்தநல்முந்தகாவாற் கால்களூட்டி
ஜென்னத்துபிருதவுசால் விட்டம்போட்டுச்
குதறத்தினாலேயில வடங்கள்பூட்டிச்
குல்வுலெள்ளுமகுபூழய் பலகைபாவி

மதுரவாய்க்கூறல்கின்கள் கவரிவீச
வானவர்கள்பன்னீரா லாத்தியேந்த
விதுவதன அபஷிராவும் வடந்தொட்டாட்ட
வேதாம்பாலநபி யாடுமூஞ்சல்..................(ஆட)

௬. லாகூத்தினாலேயொளிக் கால்கணாட்டி
நயமுள்ளமலக்கூத்தால் விட்டம்போட்டுத்
தீர்க்கமுள்ளஜெபறூத்தால் வடங்கள்பூட்டி
ஜெயவொளிகலறத்தாற் பலகைபாவி
வாக்கில்சலவாத்துடனே சவுதாஉம்மா
வரிசையுள்ளறகுமாவும் வடந்தொட்டாட்டத்
தீர்க்கமுள்ளஆலநபி யாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதனா ராடுமூஞ்சல்... ... ... ...(ஆட)

௭. சந்தனத்தினாலிலங்கக் கால்கணாட்டித்
தயங்கவொளியகிலதனால் விட்டம்போட்டு
விர்தையுள்ளகுங்குமத்தால் வடங்கள்பூட்டி
விளங்குகின்றகஸ்தூரிப் பலகைபாவிக்
கொந்துலவுகூறல்கின்கள் கவரிவீசக்
கூர்மையுள்ள உம்முசல்மா வடந்தொட்டாட்டச்
சுந்தரஞ்சேரலநபி யாடுமூஞ்சல்
சோதிநபிமுகம்மதனா ராடுமூஞ்சல்.............(ஆட)

௮. பொன்னொளிவினாலேசில கால்கணாட்டிப்
புகழொளிவினாலதின்மேல் விட்டம்போட்டு
மின்னொளிவுபோலமுத்து வடங்கள்பூட்டி
மேன்மையுள்ள மரகதத்தாற் பலகைபாவிக்
கன்னியர்கள்கூறல்கின்கள் கவரிவீசக்
கதியுறும்உம்முல்மாக்கின் வடந்தொட்டாட்ட
மன்னர்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
மக்கநகர்முகம்மதனா ராடுமூஞ்சல்...... ... ...(ஆட)

௯. ஆணிப்பொன்னதனாலே கால்கணாட்டி
பழகுமணிரத்தினத்தால் விட்டம்போட்டு
மாணிக்கமிழைத்தமணி வடங்கள்பூட்டி
வானிலங்குமதியமெனப் பலகைபாவி
சேனாட்டுகூறல்கின்கள் கவரிவீச
செயினபுநாச்சியார் வடந்தொட்டாட்டப்
பூனாமார்பிறசூ லாடுமூஞ்சற்
புகழ்பெற்றநபியிறசூ லாடுமூஞ்சல் ............(ஆட)

௰. சித்திரத்தினாலேசில கால்கணாட்டித்
தெள்ளமுதவில்பத்தால் விட்டம்போட்டு

வெற்றியுடனம்பொன்னால் வடங்கள்பூட்டி
மேவும்வயிடூரியத்தாற் பலகைபாவி
மத்திதனில்ஹூறுல்ஈன்கள் கவரிவீச
மறியம்ஆசியாஇருவர் வடந்தொட்டாட்ட
முத்திஷாசோலநபி யாடுமூஞ்சல்
முஸ்தபாமுகம்மதனு ராடுமூஞ்சல்......... ...(ஆட)

௰௧. திக்கெருளிவாலேசில கால்களூட்டித்
தீர்க்கமுள்ளதகுபீகால் விட்டம்போட்டுத்
தக்குபிர்தன்னொளிவால் வடங்கள்பூட்டித்
தலையுடனேதகுலீலாற் பலகைபாவிப்
பக்கலிலேஹூறுல்ஈன்கள் கவரிவீசப்
பண்பயூபக்குமர் வடந்தொட்டாட்ட
மக்கநகர்வாழரச ராடுமூஞ்சல்
முகம்மதற்றசூல்நயினா ராடுமூஞ்சல்...... ...(ஆட)

௰௨. அல்கம்துஎன்றதொரு கால்களூட்டி
பில்லாகியென்றதன்மேல் விட்டம்போட்டு
நலமுடையறப்பிலென்ற வடங்கள்பூட்டி
நல்லதொருஆலமீன் பலகைபாவி
கல்புமகிழ்ஹூறுல்ஈன்கள் கவரிவீசக்
கதியுதமானுரலியும் வடந்தொட்டாட்டக்
செல்வமுறும்ஆலநபி யாடுமூஞ்சல்
செய்யிதுமுகம்மதனு ராடுமூஞ்சல்...... ......(ஆட)

௰௩ சுல்த்தானியென்றதொரு கால்களூட்டிச்
சுத்தமுள்ளமலக்கானி விட்டம்போட்டுக்
குல்த்தானியென்றதின்மேல் வடங்கள்பூட்டிக்
குலவும்ஒளிப்புறக்ஸானிப் பலகைபாவி
வலயிடமும்ஹூறுல்ஈன்கள் கவரிவீச
வள்ளலசனுசைனும் வடந்தொட்டாட்டக்
குல்த்திஉயர்குறைசிநபி யாடுமூஞ்சல்
கோஜாமுகம்மதனு ராடுமூஞ்சல்...... ... ...(ஆட)

௰௪, வல்லவன்றன்றருமத்தாற் கால்களூட்டி
வரிசையுள்ளநிருமத்தால் விட்டம்போட்டு
நல்லதொருஆபியத்தால் வடங்கள்பூட்டி
நலமானநிருபையினாற் பலகைபாவி
வல்லியர்கள்ஹூறுல்ஈன்கள் கவரிவீச
வாஞ்சிபுரீல்மீக்காயில் வடந்தொட்டாட்டச்

செல்லுலவுகவிகைநயி யாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதரு ராடுமூஞ்சல் ... ... ... (ஆட)

௰௫. வாசமுள்ளபூமரத்தாற் கால்களூட்டி
வடிவுள்ளவச்சிரமணி விட்டம்போட்டு
நேசமுடனொளிவுடைய வடங்கள்பூட்டி
நேர்மையுள்ளபொன்னதனாற் பலகைபாவி
ஆசையுடன்கூறுல்ஈன்கள் கவரிவீச
இசுறயில்இசுறாபீல் வடந்தொட்டாட்டத்
தேசம்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதரு ராடுமூஞ்சல்... ... ... ...(ஆட)

௰௬. காபகௌசைனியாற் கால்களூட்டிக்
கல்பென்றகுழ்ச்சமதால் விட்டம்போட்டுச்
சாயசந்திரசூரியகலை வடங்கள்பூட்டிச்
சங்கைமக்காமன்மகுமூதுப் பலகைபாவித்
தாபரந்தொண்ணூற்றறுவர் வடந்தொட்டாட்டச்
சங்கையுடனேவரங்கே கவரிவீசச்
சாபல்பமுகம்மதரு ராடுமூஞ்சல்
தாசல்அன்பியாஇருந்தே ஆடுமூஞ்சல்...... ...(ஆட)

௰௭. ஆலமஜிசாமதனாற் கால்களூட்டி
ஆலமிதாலானதனால் விட்டம்போட்டு
ஆலமறுவாகதனால் வடங்கள்பூட்டி
ஆலமின்சானதனாற் பலகைபாவிச்
சாலவுமேமுகியித்தீன் வடந்தொட்டாட்டச்
சங்கையுள்ளகபீதென்னும் சாகிபீன்ற
இலமுறாம்சிருசித்தின் மனத்திலுற்ற
செய்யிதுமுகம்மதரு ராடுமூஞ்சல் ... ... ... (ஆட)

ஊஞ்சற்பாட்டு - முற்றிற்று.

இஃது.

புதுச்சேரி-ஒ காதிறுமுகியித்தீனென்பவர்பாடிய

## காரணக்கும்மி.

கும்மியடிபெண்ணேகும்மியடி -குவி- சொடுக்கியோடவே
கும்மியடி, நம்மையாளுமிறையவனைத்தினமும் நாடிக்கும்மியடியு ... ... (க)
ங்கடி-தினந்-தேடிக்கும்மியடியுங்கடி ...

தானேதானாயிருப்பவனும்-என்றுந்-தன்னந்தனிமையுடைய வனும், வானமும்பூமியும்போற்றுமிறைவனை வணங்கிக்கும்மியடி யுங்கடி-மன-மிணங்கிக்கும்மியடியுங்கடி… … … (௨)

ஆலம்படையுணக்காரணமாய்-நின்ற- அண்ணல்முகம்மதுந ற்நபிமேற், சாலவுமாசலவாத்தினையோதிச் சாற்றிக்கும்மியடியுங்க டி-மனந்-தொற்றிக்கக்கும்மியடியுங்கடி. … … (௩)

ஆதியினிலொளிவாயிருந்தே- பின்னர்- அப்துல்லாறெத்பியி ல்வந்துதித்தே, மாதாமினாபெற்ற வள்ளலைப்போற்றி மகிழ்ந்து கும்மியடியுங்கடி மிகப்- புகழ்ந்துகும்மியடியுங்கடி………(௪)

எல்லாவஸ்துப்படைத்தவனு- மென்றும் ஈரேழுலகையுங்கா ப்பவனும், அல்லாவென்னும்பேர் கொண்டவன்றாதனை யடுக்கக் கும்மியடியுங்கடி-பவம்-விடுக்கக்கும்மியடியுங்கடி. … … …(௫)

வானுலகெங்கும்புகழ்ந்தேற்று-மக்க- மாநகர்தன்னி லவதரி த்த, தேனவிழ்மாலைமுகம்மதுநறநலைத் தெரிந்துகும்மியடியுங்கடி மனம்- புரிந்துகும்மியடியுங்கடி.… … … …(௬)

அரம்பைகளோடாசியாமரிய-மிவ்-வவனியின்மருத்துவம்பு குதக், கருணையுலவப்பிறந்தமுகம்மதைக் கருதிக்கும்மியடியுங்கடி குழல்-சொருகிக்கும்மியடியுங்கடி. … … … (௭)

ஞானமுந்தானமுநல்லறிவு-மிக்க- நாணமுமானமுமுள்ளவ ராம்,வானவர்போற்றுமுகம்மதுநறநலை வாழ்த்திக்கும்மியடியுங்க டி-கரந்-தாழ்த்திக்கும்மியடியுங்கடி. … … …(௮)

சுற்றிலுங்காதவழியிலரசருஞ் சூடிகைமன்னர்களிரந்தலைமு ற்றுநடுக்கநபிப்பட்டம்பெற்றோனை முடுகக்கும்மியடியுங்கடி-மி கக் கடுகக்கும்மியடியுங்கடி. … … … … (௯)

மதுசின்புதல்வரிருவருஞ்செத்து மரித்திடுஞ்செய்தி யறிந்த வுடன், துஆச்செய்தெழுப்பியதூதரைப் போற்றித்துதித்துக்கு ம்மியடியுங்கடி-மிக-மதித்துக்கும்மியடியுங்கடி.… … (௰)

வஞ்சனைத்தொழில்கள் வானுலகிற்செல்ல மாட்டாதென்றெ ண்ணியேவாக்களித்தோர், நெஞ்சம்புழுங்க நிலவைப்பிளந்தோ ரைநினைந்துக்கும்மியடியுங்கடி-அகில்-புனைந்துகும்மியடியுங்கடி()

ஓதுங்கியாமத்தில்மானிடர்கள் மிக-வொடுங்கியலையும் போ தினில்நல், லாதரஞ்சொல்லிமன் றூடுநபியுக ழந்துகும்மிய டியுங்கடி-மலர்-சொரிந்துகும்மியடியுங்கடி. … … (௰௨)

ஆசிக்குலத்திலுதித்தவராம் பனீ ஆதம்மரபினி லுள்ளவர்க
ம்,வாசனைவீசுமெய்த்தூதரின்நீன்மிக வலுக்கக்கும்மி யடியுங்கடி-
நிதஞ்-சொலிக்கக்கும்மியடியுங்கடி... ... ... (௰௩)

சல்மான்பாரிசுக்காண்டினிலிருந்து தளிர்த்துக்கனிதா நட்டளி
த்த, செல்லார்கவிகைமாதவர்தீன்மிகச் செழிக்கக்கும்மி யடியுங்க
டி-பவம்-ஒழிக்கக்கும்மியடியுங்கடி. ... ... (௰௪)

திமிசுக்கிறையவனின்றதசையினைச்சிர்பெறப்பெண்ணுருவா
க்கிவைத்த, அமரர்புகழும்அருமறைதப்போற்றி அன்பாய்க்கும்மி
யடியுங்கடி-மிகு- தென்பாய்க்கும்மியடியுங்கடி ... ... ...(௰௫)

காட்டினில்வாழும்பிணைக்குப்பிணைநின்று காரணமனந்தங்
காட்டிமறை, யேட்டிலடங்காவிறையவன்றாதரை யிசைந்துகும்
மியடியுங்கடி-மெள்ள-அசைந்துகும்மியடியுங்கடி... ... ...(௰௬)

பொல்லாச்சூதனிபுலீசுந்-தினம் - புலம்பித்திரியப் பூதலத்தி
ன், மல்லிடுங்காபிலாவென்றமுகம்மதை வாழ்த்திக்கும்மி யடியுங்
கடி-கரந்-தாழ்த்திக்கும்மியடியுங்கடி... ... ... (௰௭)

வாடைகஸ்தூரிவழிகாட்ட-வந்த- வள்ளல்முகம்மதர்வாக்கிய
த்தின், சாடைக்குளம்பொருந் தாதவர்தங்களைச் சாடிக்கும்மியடி
யுங்கடி-தமிழ்ப்-பாடிக்கும்மியடியுங்கடி. ... ... (௰௮)

வானுலகிற்சென்றிறையுடனே-மிக்க- வார்த்தைகளாடியவள்
ளல்தந்த, தீனையிகழ்ந்துநடக்கின்றதிமையர் தெளியக்கும்மியடியு
ங்கடி-இடை-நெளியக்கும்மியடியுங்கடி. ... (௰௯)

வாக்குமனமும்பொருந்தச்சொலுங் - கலி - மாவின்பொரு
ளைமனதில்வையா, மாக்களையேகன் வதைப்பனென்றெண்ணியே
வருந்திக்கும்மியடியுங்கடி-புணை- வருந்திக்கும்மியடியுங்கடி. (௨௰)

நாளொன்றுக்கைந்துவிசைவணங்கா-ரந்த- நாளில்நரகந்தனி
லிருந்தே, தேளொன்றுகொட்டித்திகைப்பரென்றே-மனந்-தேம்
பக்கும்மியடியுங்கடி முகங்-கூம்பக்கும்மியடியுங்கடி ... ...(௨௧)

சுறகின்தங்கடமின்றிறன்ஞேன்பைச்- சட்டைசெய்யாமலே
விட்டுவிட்டோர்,நரகினிற்பசித்தலைவரென்றே நவின்றுகும்மியடி
யுங்கடி-மனம்-புகன்றுகும்மியடியுங்கடி. ... ... (௨௨)

கள்ளுச்சாராயந்தனைக்குடித்துச்சடைக்- கஞ்சாவபினிமிகப்
புசித்தே, துள்ளிவிழுந்தலைந்தேநடக்கின்றவர்சுருங்கக்கும்மியடியு
ங்கடி-எரி-நெருங்கக்கும்மியடியுங்கடி. ... ...(௨௩)

சூதுசதுரங்கந்தன்னுடனே-தினஞ்-சொக்கட்டானுடுந் தடு க்கசொல்லாம், வாதிற்பொருளழிந்தோய்ந்தபின்றீயினில் வளர்க்கு ம்மியடியுங்கடி-விழி புரளக்கும்மியடியுங்கடி... ... ... ...(௨௪)

கொண்டமனைவியைவிட்டொருவன்-கொண்ட-கோதையின் மீதினிற்காதலுற்ற, மிண்டர்கள்தீயில்விழுந்தழிவாரென்றே வின விக்கும்மியடியுங்கடி-மூக-மினவிக்கும்மியடியுங்கடி... ...(௨௫)

இந்தக்கும்மியைப்படித்தோர்க்கு-மிக- இலங்கஅச்சிற்பதித் தோர்க்கும், முற்றுமிறையவன்றருமத்தண்டென்றே வாழ்த்திக் கும்மியடியுங்கடி-வாழ்க-ஏத்திக்கும்மியடியுங்கடி,... ... ...(௨௬)

கும்மிப்பாட்டு—முற்றுப்பெற்றது,

இஃது.

முன்னோர்கள்பாடிய

# தாலாட்டு

காப்பு—வெண்பா.

பாருலகில்வண்ணப் பரிமளம்வீசும்மிறருல்
சீருலகிற்றாலாட்டைச் செப்புதற்கு—நேருடனே
பார்த்தாலுமென்சொற் பழுதுவாராதபடி
காத்தருள்வா யாதிநீ காப்பு

கண்ணிகள்.

சீர்கொண்ட ஆலமெல்லாஞ் சிறந்தஇசுலார்தழைக்க
நேர்கொண்டதீனெ நெறிகொண்டுவந்தவரே (௧)

முன்னேயொளிவாகி முதலோன்பிருத்துதாய்ப்
பின்னேநபியாய்ப் பிறந்தமுகம்மதுவே (௨)

அண்ணலப்துல்லாதரும் அருமைமகவாகப்
பெண்ணினழகாமினார் பெற்றெடுத்தபாலகரே (௩)

அலிமாமுலையருந்தி யவரகத்திலேவளர்ந்து
புலிமானொருதுறைநீர் உண்ணவந்தபுண்ணியரே (௪)

திக்குத்திகாந்தமொடுந் தேயந்தனக்குயர்ந்த
மக்கம்பிறந்து மதீனம்ஆளவந்தவரே (௫)

மட்டிலவுஞ்சொர்க்க வாழ்மடவார்தாலாட்டத்
தொட்டிலிற்றுயில்கொள்ளுந் தூய்யமுகம்மதுவே (௬)

மாணிக்கத்தொட்டிலதை மடவார்பிடித்தாட்டப்
பூணிக்கையாய்க்கண்வளரும் புண்ணியராய்வந்தவரோ (௭)

பார்க்கக்கனலெரியும் பாலைக்கடுஞ்சுரத்தில்
ஆருக்கும்நீரளிக்கும் அண்ணல்முகம்மதரே (௮)

பாரமலைபோல்நாகம் பதியிற்படம்விரித்தே
நேரில்லாதிருக்கக்கண்டுநீள் அரும்பால்வதைத்தோரோ (௯)

கானகத்திலாறுதனைக் கடுகேவரவழைத்தே
யீனமில்லாநீரளிக்கு மெங்கண்முகம்மதுவே (௰)

புதியகிணறுப்புநீர் பொங்கிறம்பதங்கழுவ
நதியழைத்துக்காட்டவந்த நன்மைமுகம்மதுவே (௰௧)

எங்கணமிருசே யெல்லவர்க்குந்தாயகமே
அங்கங்கஸ்தூரிவீசு மழகார்முகம்மதுவே (௰௨)

ஆதிபடைத்த அப்துகளடங்கலுக்கும்
நீதிமணிப்பேரொளிவாய் நின்றமுகம்மதுவே (௰௩)

முத்திஇதித்தவரே மூம்றுய்வந்தவரே
நித்தனருள்வேதப்படி நெறிநடத்துங்கோமானே (௰௪)

மஞ்சுகுடைநிழற்ற மக்காவின்வீதியெல்லாம்
கொஞ்சிவிளையாடுமெங்கள் கோமான்முகம்மதுவே (௰௫)

விண்ணினரசேசது வேதமுகம்மதுவே
கண்ணின்மணியேயெங்கள் காரணரேகண்வளரீர் (௰௬)

தேசப்பொருளே தெவிட்டாச்செழும்பாகே
வாசத்திருமேனி வள்ளன்முகம்மதுவே (௰௭)

உற்றஅபூபக்கருக்கும் உண்மையுமர்தமக்கும்
மற்றுநிகரில்லாத மருகரெனவந்தவரே (௰௮)

செய்யுமுதுமானூர்க்குஞ் சிறந்தபுலிஅலிக்கும்
வையம்புகழ்மாதுலராய் வந்தமுகம்மதுவே (௰௯)

சீராரிமாம்அசனூர் சிறந்தஇமாமூசைனூர்
பேரார்நற்பேரரெனப் பேறுகொள்ளவந்தவரே (௨௰)

தண்ணசகாபிமார்கள் நாற்பத்திராயிரர்க்கும்
கண்ணிலொளிபோலக் கலந்திருந்தகாரணரே (௨௧)

திக்குகளில்தீனிசுலாஞ் சேர்ந்தவும்மத்தோர்களையே
தற்காத்தேயாளும் ஷபாஅத்துக்குடையவரே (௨௨)

பங்கயப்பொற்றாள்பீவி பாத்திமாநாச்சியெனும்
மங்கையர்க்குத்தந்தையென வந்தமுகம்மதுவே (௨௩)

அண்டர்புகழ்கதிஜா அங்கணவனென்றுலகோர்
கொண்டுபுகழவந்த கோமான்முகம்மதுவே (௨௪)

எண்டிசையும்பாரு மேகாப்பெரும்பதியும்
அண்டருலகெல்லாம் அரசாளவந்தவரே (௨௫)

குடேறுந்தியதனுட் சுழன்றெரியும்பாவிகளை
ஈடேற்றிக்காக்கவந்த வெங்கண்முகம்மதுவே (௨௬)

மீனுடும்பேசி மிடியருக்குவாழ்வுநல்கி
மானுடும்பேசுமெங்கள் வள்ளன்முகம்மதுவே (௨௭)

வேம்பானகாபிருமமை வெட்டவரும்வழியிற்
பாம்படையும்பொதும்பிற் பள்ளிகொள்ளவந்தவரே (௨௮)

நல்லநெறியீமானு நானிலத்திலேதழைக்கக்
கல்லுங்கரம்பிடித்துவிடக் காட்டவந்தகாரணரே (௨௯)

தீமைதனைப்பேசுகின்ற செயலைக்கருவறுத்தே
உண்மைதனைப்பேசவைக்கு முண்மைமுகம்மதுவே (௩௰)

அறபுத்திருநாட்டில் அடங்கலுமீமான்றழைக்க
குறைசிப்பெருங்குலத்திற் கோமானாய்வந்தவரே (௩௧)

சொல்லாலுயர்ந்ததிருச் சொர்க்கபதிக்கரசாய்
அல்லாவருட்படிதீனை யாரம்பிக்கும்வல்லவரே (௩௨)

ஈமான்றழைக்க இசுலாம்பெருத்தோங்க
மாமானங்காக்கவந்த மன்னர்முகம்மதுவே (௩௩)

நாயுமுடும்புமுசல் நவிலுநாற்கால்மிருகம்
பேயுறுத்தமோடெதிராய்ப் பேசவைக்குங்காரணரே (௩௪)

கல்லைவணங்கும் காபிர்களையேயறுத்து
நல்லநெறியீமானை நாடேற்றவந்தவரே (௩௫)

விரிந்தகுபிர்க்காட்டை வெட்டிவழியாக்கிப்
பரிந்தபுகழீமானைப் பயிரேற்றவந்தவரே (௩௬)

செய்தவமெல்லாம்போற்றத் தீன்பயிரைத்தானேற்றிக்
கைவிரலாலீரழைக்குங் கபீபுமுகம்மதுவே (௩௭)

கொத்தாலமேயரசே கோஜாலமானவரே
சந்தாபமில்லாத சாதிக்குலநாயகமே (௩௮)

குங்குமப்பூமாலையணி கொற்றவர்களுக்கரசே
அங்கத்தொளிவீசு மன்னவல்முகம்மதுவே (௩௯)

ஆராருங்காணவொண்ணு தந்தரத்தின்மேலேபோய்ப்
பேரார்பெரியவன்முன் பேசவேவந்தவரே (௪௰)

வேதமேநாவில் விளைவானவித்தகரோ
பாதமவனிதீண்டாப் பயகாம்பர்கண்வளரீர் (௪௧)

பிடரிலணியாகப் பிறைபோலிலாஞ்சனையும்
படையேறிவென்றுவரும் பார்த்திபரேகண்வளரீர் (௪௨)

ஙகன்சமுகமதி லேக்கினை னுமரத்தில்
தோகைமயில்வடிவாய்த் தோன்றிவந்தநன்னபியே (௪௩)

முன்காணுந்தூரமட்டு முழுதுமதுபோலப்
பின்காணும்வள்ளலே பெருமையாய்க்கண்வளரீர் (௪௪)

வள்ளல்முகம்மதுமேல் வாழ்த்துகின்றதாலாட்டைப்
பிள்ளையின்பிரியம்போற் படிப்போர்களும்வாழி (௪௫)

மூமீன்முகம்மதுதம் முத்தின்மொழிதாலாட்டைப்
பூமீதிலெந்நாளும் போற்றிவோர்வாழியவே (௪௬)

பூமியின்மும்மாரிமதி பொழிந்தெவர்களும்வாழி
ஆமீனல்லாஆமீன் யாறப்பில்ஆலமீனே (௪௭)

தாலாட்டு

—*முற்றுப்பெற்றது*—

௨

விருத்தம்.

அண்டர்கோன்புகழன்னைல்முகம்மதின் ஆரணத்தையறிந்துளக த்தினிற், கொண்டுநாளுங்குலவிநடந்திடாக் கொடியர்பாழ்நரகுக்கி ரையாவரேம், பண்டுநன்னபிமார்களுவப்புறும் பாக்யமார்க்கப்படியம ல்செய்தவர், கண்டுமென்மொழிக்கன்னியர் வாழ்ந்திடுங்கனகநாட்டை க்கையாளுவர்நாளுமே.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃஅ

முன்னோர்கள்பாடிய

# தோழிப்பெண்பாட்டு

காப்பு—வெண்பா,

தோழிப்பெண்பாட்டைத் தொகுப்பாயுரைப்பதற்கு
ஆழிசூழெவ்வுலகு மமைத்தோனே—வாழியுறும்
அல்லாவேயென்றனக் கன்பருளையேதிதமும்
வல்லானேயீந்தருளு வாய்,

கண்ணிகள்,

அரியவனேபெரியவனே ஆயிரம்பேருடையவனே
உரியவனேயுடையவனே யுலகமெல்லாம்படைத்தவனே. (௧)

உலகமெல்லாம்படைத்தவனே யுண்மையுள்ளமெய்ப்பொருளே
பலமலையும்அலைகடலும் படைத்தழிக்குங்காரணனே. (௨)

காரணனேயாரணனே கருத்தறியுங்கோமானே
பூரணனேநீரலையும் பூலோகமுடையவனே. (௩)

பூவுலகம்வானுலகம் போற்றிசெய்யும்புண்ணியனே
மூவுலகங்கொண்டாட முக்கியமாய்ப்பாடுகிறேன். (௪)

தோழிப்பாட்டுபாடுகிறேன் சோதியுள்ளமன்னவனே
வாழியருள்தந்தே வன்மையாய்க்காத்தருள்வாய். (௫)

காத்தருள்வாய்காத்தருள்வாய் கத்தாவேகாத்தருள்வாய்
பார்த்தருள்வாய்க்கிருபையினாற் படைத்தவனேயுன்னருளால். ()

மதித்தபெருமைபுதுமையைக்கேள் மக்கமெனுமோர்பதியாம்
கதித்தபுகழ்அவ்வூரில் கருபத்துல்லாப்பள்ளிபெண்ணே. (௭)

காபத்துல்லாப்பள்ளியினுட் காரணங்களும்மிகுதி
ஆபத்தெல்லாம்நீங்கு மன்னமேதோழிப்பெண்ணே. (௮)

நன்னிலமாம்பொன்னிலத்தில் நபிவாழுநல்விடமாம்
பொன்னிலமுமொவ்வாதாம் பூமிக்கெல்லாம்பொருத்தலமாம். ()

பூமிக்கெல்லாம்பொருத்தலமாம் போறுநிலாவிலகிடுமாம்
சேமமுள்ளவரிசை சேர்ந்ததலந்தோழிப்பெண்ணே, (௰)

பதியடுக்கநாடுபவர் பாவமெல்லாந்தீர்ந்திடுமே
நதியழைத்தநபியிறசூல்நாடேந்தலந்தோழிப்பெண்ணே (௰௧)

நன்மதிசேர்மக்கமதில் நபியிறசூல்பிறந்ததலம்
பொன்மதில்சூழ்கோட்டையுடன்பூங்கமுருகுசோலைகளும். (௰௨)

பூங்காவனங்களினுள் பூமணங்கள்வீசிடுமாம்
ஆங்கானவூரில் அறபாத்துமலைதோழிப்பெண்ணே. (௰௩)

அறபாத்துமலையிடத்தில் அச்சுசெய்யநன்மையுண்டாம்
நிறைவேற்றுங்கருமமெலாம் நோகுந்தோழிப்பெண்ணே. (௰௪)

நோகவானோர்கள் நித்தம்வந்திறங்குந்தலம்
பாரோர்புகழுகின்ற பள்ளியுண்டுந்தோழிப்பெண்ணே. (௰௫)

பள்ளிக்கெதிராகப் பத்துக்கொடிபறக்கும்
வெள்ளிபேல்மனூரு விளங்கிடுமேதோழிப்பெண்ணே, (௰௬)

மெத்தப்பயத்துடனே மேலோன்வணக்கஞ்செய்வார்
குத்துபாஅன்றகுறான் முழங்குந்தோழிப்பெண்ணே. (௰௭)

அந்திமுள்ளஇன்றுநபி யழகாகவந்தங்ஙன்
புந்தியுறப்பெரியோனைப் புகழுவார்தோழிப்பெண்ணே. (௰௮)

அலரவர்கள்வத்தக் கலங்காரமாயிருந்தே
திவழுகின்றபள்ளியினுள் தீங்கலிமாமுழக்கிடுவார். (௰௯)

தீனிறசூல்தானிருந்த திருமனையுமவ்விடமே
வானொளிவுமவரொளியில் மறைந்துவெளிதோன்றிடுமே (௨௰)

தோன்றும்நபிநாயகத்தைச் சூழ்ந்திருப்பார்வானவர்கள்
என்றுசொல்லும்பெருமைதன்னை எண்ணத்தொலையாதே. (௨௧)

எண்ணத்தொலையாதே யிறசூல்தம்மெய்யொளிவு
கண்ணுக்கடங்காதே கல்புகுளிர்ந்திடுமே (௨௨)

கல்புகுளிர்ந்தேநிசமுங் கருமமெல்லாந்தீர்ந்திடுமே
செல்வம்பெருகிடுமே ஜெகனத்துமுண்டாமே. (௨௩)

பண்ணமைந்தழிவி பாத்திமாநாயகத்தின்
தண்ணமைந்தபாவரவின் சபாஅத்துமுண்டாமே. (௨௪)

ஸ்ராசனுசைனூர் செல்வரிருவருந்தான்
வீரூர்முடிதரித்த வெண்டியுள்ளோர்தோழியரே. (௨௫)

ஓரடுக்காந்தோழிப்பெண்ணே ஓதுக்கலிமாவை
ஈரடுக்காந்தோழிப்பெண்காள் எண்ணித்தொழுதிடுங்காள். (௨௬)

மூவடுக்காஞ்சக்கரத்திங்கள் முத்தானவையாலே
நாவடுக்காந்திநாகம் நம்மளவில்நாடாதே. (௨௭)

நாலடுக்காந்தோழிப்பெண்காள் நபிதரும்தோன்புதனை
மாலடுக்கவேபிடிப்பீர் வாழ்வுவருந்தோழிப்பெண்காள். (௨௮)

அஞ்சடுக்காந்தோழிப்பெண்காள் அச்சுதனைச்செய்திடுவீர்
நஞ்சடைந்ததிநாகம் நம்மளவில்நாடாதே. (௨௯)

ஆறடுக்காந்தோழிப்பெண்காள் அல்லாஹுவனென்றும்
மாறடுக்காதேபுகழ வாழ்வுவருந்தோழிப்பெண்காள். (௩௰)

ஏழடுக்காந்தோழிப்பெண்காள் ஏகன்மலக்குளோம்
தாழடுக்காதார்களென்று தானறிவீர்தோழிப்பெண்காள். (௩௧)

எட்டடுக்காந்தோழிப்பெண்காள் இறங்கியநால்வேதமுடன்
மட்டுமொழியாம்சுகுபும் வல்லோன்மொழிதோழிப்பெண்காள்.

ஒன்பதுவாம்நம்பிறசூல் உள்ளநபிமார்களெல்லாம்
அன்பொடிறைதூதரென் றறிந்திடுவீர்தோழிப்பெண்காள் (௩௩)

பத்தடுக்காகின்றதுதான் பலவுயிரெல்லாமெழுப்பி
கத்தனன்மைதின்மைகளை கேட்கிறதாந்தோழிப்பெண்காள் (௩௪)

ஆயபதினோர்காரியமும் ஆகுமேயவனிடத்தில்
நாயனொருவன்றானே நன்மைக்காயமல்லால், (௩௫)

ஓதரியதின்மைதனக் குமாயமில்லைதோழிப்பெண்காள்
நீதியுடனிந்தப்படி நீங்கள்அறிந்துகொள்வீர், (௩௬)

உண்மையுளஆதநபி யுவந்தபஜிறுத்தொழுகை
வண்மையுடனேதொழுக வருவீர்கள்தோழிப்பெண்காள், (௩௭)

வேதஇபுறாகீம்நபி வேண்டும்லுகறுத்தொழுகை
மாதர்களேநின்றுதொழ வாருங்கள்தோழிப்பெண்காள், (௩௮)

வெற்றியூனூசுநபி விளங்கும்அசறுத்தொழுகை
பற்றியதையேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள், (௩௯)

தானவராமூசாநபி தம்மகரிபுத்தொழுகை
மாசறுடனேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள், (௪௰)

ஈசாநபிதொழு தாரிவியஇஷாத்தொழுகை
கூசாமலேதொழுகக் கூடிவாரீர்தோழிப்பெண்காள், (௪௧)

இசாவதனில்நம்பிறசூல் இறைஞ்சும்வித்துறுத்தொழுகை
ஆசாரமாய்த்தொழுக அய்யன்வாருந்தோழிப்பெண்காள், (௪௨)

அன்னமேதோகையரே அழகாரும்பெண்குயிலே
சொன்னமேபைங்கிளியே தொழுதிடுவோம்நன்றாக, (௪௩)

அல்லாவின் தூதுவரை ஆலநபியானவரை
வல்லாண்மைகொண்ட முகம்மதறசூல்நபியை, (௪௪)

இட்டாதரநந்நபியைக் கீர்த்திபெறுங்கடலைக்
கட்டாணிமுத்தொளிவை சபீயிறசூலானவரை. (௪௫)

சிந்தாமணியசரைத்தீன்விளக்கவந்தவரைக்
கொர்தாலமானவரை கோஜாலமானவரை, (௪௬)

சந்தாபமில்லாத சாதிகுலநாயகத்தை
முந்தவுதித்தவரை மூமீன்கள்கைப்பொருளை, (௪௭)

ஆதியருள்பெற்றோரை யாசாரநீதியரைப்
பாதிநிலவதனைப் பகிர்ந்தமுகம்மதரை, (௪௮)

முத்தாயுதித்திருந்த முகம்மதுறசூல்நபியை
நித்தம்புகழ்ந்திடுவீர் நேசமுள்ளதோழிப்பெண்காள், (௪௯)

சத்தமுள்ளவிறசூல் சுத்தமாய்ப்பெற்றெடுத்த
பத்தினியாத்திமத்தின் பலன்ஷபாஅத்தும்பெறுவீர். (௫௰)

ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

தோழிப்பெண்பாட்டு

முற்றுப்பெற்றது,

---

இஃது-இராமநாதபுரம்-இரவுஷாப்புக்கடை
ப-வெ-முகம்மது-இபுறுகிம்சாகிபு-முயற்சியால்
குலசேகரம்பட்டணம்-சர்க்கரைசாகிபுத்தம்பியவர்கள்குமாரர்
அல்லாபிச்சைப்புலவரவர்களால்
இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தி அச்சியற்றியது.